SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Ordinary Level

# தமிழ்

**1157/3**

தாள் 3

# ORAL EXAMINATION

**TAMIL**

Paper 3

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

குறிப்புகள்:

1. வாய்மொழித் தேர்வு பின்வரும் இரு பகுதிகளை உள்ளடக்கியது:

    - **பகுதி 1 - வாய்விட்டு வாசித்தல்**
      நீ ஒரு பனுவலை வாய்விட்டு வாசிக்க வேண்டும்.

    - **பகுதி 2 - ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**
      நீ ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்க வேண்டும். அதன் பின்னர், தேர்வாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும்.

2. நீ **'START'** என்பதைக் கிளிக் செய்ததும், பனுவலை மனத்திற்குள் படித்துக்கொள்வதற்கும் ஒளிக்காட்சியைப் பார்த்துக்கொள்வதற்கும் உனக்கு 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

Singapore Examinations and Assessment Board

©MOE

# 2024 சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்
# சாதாரணநிலைத் தேர்வு
# தமிழ் வாய்மொழித் தேர்வு (1157/3)

---

## பகுதி 1: வாய்விட்டு வாசித்தல்

ஒருவரது புன்னகை பிறரைக் கவர்ந்து இழுக்கக்கூடிய ஆற்றல் மிக்கது. தம் முகத்தில் எப்போதும் புன்னகையை இழையோடச் செய்பவர்கள் உடலளவிலும் உள்ளத்தளவிலும் புத்துணர்வோடு வலம் வருகிறார்கள். புன்னகையோடு ஒருவரிடம் பேசும்போது கேட்பவரின் மனத்தில் அப்பேச்சு எளிதில் பதிவதுடன் அவர் சொல்வதைக் கூர்ந்து கேட்கும் ஆர்வத்தையும் அதிகரிக்கிறது என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இருவரிடையே இறுக்கமான சூழல் நிலவும்போது உதட்டோரம் இழையோடும் புன்னகை அவர்களை அச்சூழலிலிருந்து விடுவிக்க உதவுகிறது.

புன்னகை சிரிப்பாக மாறும்போது அது நமக்கும் நம்மைச் சுற்றியிருப்போருக்கும் மகிழ்ச்சியான சூழலை உருவாக்குகிறது. ஒருவர் சிரிக்கும்போது அவருடைய உடலிலுள்ள நானூறுக்கும் மேற்பட்ட தசைநார்கள் இயக்கப்பட்டு அவரைப் புத்துணர்ச்சி பெறச் செய்கின்றன. தற்போது மேலை நாடுகளிலுள்ள உடற்பயிற்சிக் கூடங்களில் மக்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளுள் சிரிக்க வைக்கும் பயிற்சிகளும் இடம்பெற்றுள்ளன. இருப்பினும், செயற்கையாக வரவழைக்கப்படும் சிரிப்பைவிட உள்மனத்தில் தோன்றி இயல்பாக வெளிப்படும் சிரிப்பே வலிமை வாய்ந்தது. அது நம்மையும் பிறரையும் உற்சாகப்படுத்தும் மகத்துவம் பெற்றது.

**2024 சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்**
**சாதாரணநிலைத் தேர்வு**
**தமிழ் வாய்மொழித் தேர்வு (1157/3)**

(வாய்மொழித் தேர்வாளர் பயன்பாட்டுக்கு மட்டும்)

---

**பகுதி 2: ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**

**தூண்டுதல் வினாக்கள்:**

1. ஒளிக்காட்சியில் சில நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. இத்தகைய நடவடிக்கைகளில் நீ பங்குபெற விரும்புவாயா? ஏன்?

2. இத்தகைய நடவடிக்கைகளில் அதிகமான மாணவர்கள் பங்கேற்கப் பள்ளிகள் எவ்வாறு அவர்களை ஊக்குவிக்கலாம்?

3. இத்தகைய நடவடிக்கைகள் மாணவர்களின் பண்புநலன்களை வளர்க்கின்றன. நீ இக்கருத்தினை ஏற்றுக்கொள்கிறாயா? ஏன்?

BLANK PAGE

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.